சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 198/2022

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 02ம் நாள் RW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு.அன்பரசு<br>த/பெ. | நாள் 02.03.2026 |
| வயது. | தொழில் |
| கிராமம். | வட்டம். |

2ம் எதிர் மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்

நான் மதுராந்தகம் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை – 1 பகுதி அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியமளிக்க எங்கள் அலுவலகத்திற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன் பேரில் அழைப்பாணையில் கண்டுள்ள TN 73 W 9699 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.1.** அந்த ஆய்வறிக்கைப்படி அந்த வாகனத்திற்கு தகுதி சான்றிதழ் ஆய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் அந்த வாகன ஓட்டுநருக்கு அதி கனரக சரக்கு வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை எனவும் தெரிய வந்தது. எனவே அந்த வாகனம் எங்கள் அலுவலகத்தால் சிறை பிடிக்கப்பட்டது.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. சா.சா.1ல் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு புதிதாக எவ்வித சேதாரமும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை – இல்லை.**